**தேதி :** 03.02.2026 **SC.No. :** 79/2023 PW :1 முகமது இஸ்மாயில்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாகன சோதனையை சுமார் ஒரு மணி நேரம் நடத்தினோம். சார்பு ஆய்வாளர் என்னுடன் இருந்தார். வாகன சோதனை செய்த இடம் பள்ளியின் வடபுறம் என்றால் சரிதான். பள்ளியின் வாசலுக்கு வடக்கு பக்கம் என்றால் சரிதான். எதிரி பள்ளியின் வாசலுக்கு முன்பு வண்டியை நிறுத்தி பள்ளி மாணாக்கர்களுக்கு புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக துலங்காது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் செங்கோட்டையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனை செய்யாமல் இருந்திருந்தால் எதிரியின் வாகனமானது கேரளா நோக்கி சென்றிருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் பள்ளிக்கு எதனால் விடுமுறை என்றால் அது எனக்கு தெரியாது. பள்ளி விடுமுறை தினம் என்பதினால் அந்த பகுதிக்கு பள்ளி மாணவர்கள் வர வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாகனச்சோதனையை நாங்கள் வீடியோ பதிவு செய்தோமா? என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேன். மாதிரி வரைபடம் வரைந்தார்களா? என்றால் சரியாக எனக்கு ஞாபகமில்லை. எதரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனம் யாருடைய வாகனம் என்றும், அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தின் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து விட்டு தான் நாங்கள் வாகனசோதனை செய்தோம். எதிரி புகையிலை பொருட்கள் எதையும் கொண்டு வரவில்லை என்றாலும், எதிரி வாகனத்தை ஓட்டி

வரும் போது நாங்கள் கைகாட்டியும் நிற்காமல் சென்றதினால் எதிரியை பழிவாங்க வேண்டி  பொய் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 18:57:55 +0530

**தேதி :** 03.02.2026 **SC.No. :** 79/2023 PW :2 இசக்கி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாகன சோதனை செய்த இடம் பள்ளியின் வடபுறம் என்றால் சரிதான். அந்த பகுதி பள்ளியின் வாசலுக்கு வடக்கு பக்கம் என்றால் சரிதான். எதிரி பள்ளியின் வாசலுக்கு முன்பு வண்டியை நிறுத்தி பள்ளி மாணாக்கர்களுக்கு புகையிலை பொருட்களை விற்பனை செய்ததாக துலங்காது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் செங்கோட்டையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கேரளா நோக்கி போய் கொண்டிருந்தது என்றால் சரிதான். நாங்கள் வாகன சோதனை செய்யாமல் இருந்திருந்தால் எதிரியின் வாகனமானது கேரளா நோக்கி சென்றிருக்கும் என்றால் சரிதான். பள்ளியின் அருகில் நின்றிருக்க வாய்ப்பில்லை.

அன்றைய தினம் பள்ளிக்கு எதனால் விடுமுறை என்றால் கொரோன காலம். பள்ளி விடுமுறை தினம் என்பதினால் அந்த பகுதிக்கு பள்ளி மாணவர்கள் வர வாய்ப்பில்லை என்றால் சரிதான். வாகனச்சோதனையை நாங்கள் வீடியோ பதிவு செய்தோமா? என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேன். மாதிரி வரைபடம் வரைந்தார்களா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனம் யாருடைய வாகனம் என்றும், அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அந்த வாகனத்தின் உரிமையாளர் இல்லை. எங்கள் காவல்நிலையத்தின் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து

விட்டு தான் நாங்கள் வாகனசோதனை செய்தோம். நான் வாகனசோதனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வாகனச்சோதனைக்கு உதவி ஆய்வாளர் இல்லை என்றால் சரியல்ல. எதிரி புகையிலை பொருட்கள் எதையும் கொண்டு வரவில்லை என்றாலும், எதிரி வாகனத்தை ஓட்டி வரும் போது நாங்கள் கைகாட்டியும் நிற்காமல் சென்றதினால் எதிரியை பழிவாங்க வேண்டி பொய் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 18:58:04 +0530